திரு. ப. முத்துசாமி : தலைவர் அவர்களே, வறண்டப் பகுதிகளில் பெரும்பாலும் விவசாயிகளுக்குக்கூட பால் மாடு வளர்க்கின்ற தொழில் உப தொழிலாக இருந்து வருகிறது. ஆகையால் பால் சங்கங்களை அமைத்து விவசாயிகளுக்கும், கூலி தொழிலாளர்களுக்கும் உதவியாக பால் சங்கங்களை அமைக்கின்த் திட்டத்தை அரசு மீண்டும் செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வருடமும் ஆயிரம் புதிய சங்கங்கள் அமைப்பதற்காக அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றது. அந்த வகையிலே மாவட்டத்திற்கு இத்தனை சங்கங்கள் என்று சொல்லி, பெரியார் மாவட்டம் என்றால் அங்கே கடந்த வருடம் 100 புதிய பால் உற்பத்தியாளர் சங்கம் அனுமதிக்கப்பட்டு சிறந்த முறையிலே ஆரம்பிக்கப்பட்டு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எந்தெந்த பகுதிகளிலே புதிய சங்கங்கள் தேவை என்றால் அந்தப் பகுதியிலே அந்தச் சங்கங்களை ஆரம்பிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர்களிடையே மோதல்.

* 3384— திரு. இரா. மதிவாணன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், பழவேற்காட்டில் கடந்த 26—1—1989 அன்று மீன் பிடிப்பதில் மீனவர்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒன்பது மீனவர்கள் உயிர் இழந்தனர் என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு அரசு நிதி உதவி வழங்குமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) எட்டு குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு விட்டது. ஒரு குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குவது குறித்து பரிசீலனையில் உள்ளது.

1990 மே, 7]

திரு. இரா. மதிவாணன் : தலைவர் அவர்களே, பழவேற்காட்டில் உள்ள அந்த 9 குப்பத்து மக்களிடமும் நானும் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்களும் பேசி சமரசம் செய்து வைத்தோம். அதிலிருந்து இன்று வரை அவர்கள் ஒற்றுமையாக இருந்து வருகிறார்கள். அவர்கள் மீது போடப்பட்ட அந்த வழக்கை அரசு திரும்பப் பெறுமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, அது குறித்து தனியாக தெரிவிப்பாரேயானால் அதனை ஆய்வு செய்து பரிசீலனை செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. மதிவாணன் : தலைவர் அவர்களே, சென்னை, செங்கை அண்ணா மாவட்ட கடற்கரைப் பகுதிகளில் தொழிற்சாலைகளிலிருந்து நச்சுத் தன்மை வாய்ந்த கழிவுநீர் கடலில் கலப்பதால் மீன் வளர்ச்சிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே அரசிடம் இறால் வளர்ப்புத் திட்டம் உள்ளதால் மீனவர்களுக்கு அந்தத் திட்டத்தை.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

செயற்கை முறை இன விருத்தி

4181—திரு. க. வெ. வீ. இராசாமாணிக்கம்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் செயற்கை முறை இனவிருத்தி மூலம் உயர்தர ஆடுகளை இனவிருத்தி செய்யும் வகையில் ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து கிடாக்களை இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செங்கை சிவம் : தலைவர் அவர்களே, நம்முடைய காட்டுப்பாக்கம் ஆராய்ச்சி மையத்தில் ஆடுகளை மிக அதிகமாக எடையுள்ள ஆடுகளை இனப்பெருக்கம் செய்யப்படுகின்ற ஒரு